# தமிழகத்தில் நேற்று வன்முறைகள் வெடித்தன

(சென்னை)
தமிழகத்தில் நேற்று பல பகுதிகளிலும் திடீரென வன்முறைகள் வெடித்தன. பரவலான கல் வீச்சுகள் இடம்பெற்றன. அரசுக்குச் சொந்தமான பஸ்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், முன்னாள் அமைச்சர் பண்ருட்டி

[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 03 இதழ் 221
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19 — 09 — 1992

## வன்னிப் பகுதியில் திலீபன் நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் நேற்று நான்காவது நாளாக தமிழ்ப்பிரதேசமெங்கணும் அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னிப் பகுதியான ஓமந்தை, மல்லாவி, துணுக்காய், மன்னார், விடத்தல்தீவு,

(4ம் பக்கம் பார்க்க)

## மாணவர் உண்ணாவிரதம்

(உடுப்பிட்டி)
லெப். கேணல் தியாகி திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவையடுத்து நாகர்கோயில் உண்ணாவிரதத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதிப்பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இன்று 19ம் திகதி மனற்

(4ம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாவில் படையினர் மீண்டும் தாக்குதல்

# 40,000 மக்கள் இடம்பெயர்வு

# இருவர் பலி; 21பேர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

வலிமேற்குப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் நேற்றுக்காலை 5-30 மணியளவில் ஆரம்பித்த தாக்குதல் காரணமாக சுமார் 40 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்றைய சம்பவத்தில் இருவர் பலியானதாகவும். சுமார் இருபத்தொரு பேர் வரை காயமடைந்ததாகவும், வீடுகள் சேதமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்தும் பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது யாழ். நகரில் பலர் காயமடைந்ததுடன், இடம்பெயர்ந்தும் உள்ளனர். வீடுகள். ஆலயங்கள், தேவாலயங்கள் ஆகியனவும் சேதமடைந்தன.

அளவெட்டி தெற்கு, மாகியப்பிட்டி. தொட்டிலடி, சங்கானை, நிற்சாமம், சித்தன்கேணி, பணிப்புலம், பண்டத்தரிப்பு, சில்லாலை, சண்டிலிப்பாய் பண்ணாகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர். காலையில் மாதகல் இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் சுழிபுரம், பணிப்புலம், சில்லாலை சாந்தைப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. அத்துடன் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களையும் கேட்டமக்கள் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு தூரஇடங்களை நாடிச் சென்றனர். சிலர் தங்கள் ஆடு, மாடு, கோழிகள் ஆகிய கால்நடைகளையும் இழுத்துக்கொண்டு சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நேற்றுமாலைவரை சண்டிலிப்பாய், மானிப்பாய் பிரதான வீதி ஓரங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்குமிட வசதிகள் இல்லாது திண்டாடிக்கொண்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

காலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக ஹெலிகள் சுழிபுரம், வடலியடைப்பு, சித்தன்கேணி, சங்கானை, வட்டுக்கோட்டை, பொன்னாலை, பணிப்புலம், பண்டத்தரிப்பு முதலான இடங்களை சுற்றி வட்டமிட்ட வண்ணம் பறந்துகொண்டிருந்தன. அவை இடையிடையே கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டன.

ஷெல், கலிபர் தாக்குதல்களை அடுத்து பீதியடைந்த மக்கள் இடம்பெயர்ந்து நவாலி, மானிப்பாய், அராலி பகுதிகளை நோக்கி பெட்டி படுக்கைகளுடன் சென்றுகொண்டிருந்தனர்.

சைக்கிள், மோட்டார்சைக்கிள், லாண்மாஸ்டர், மாட்டுவண்டிகளில் தமது பொருட்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்தனர். இதனால் பலருக்கு போக்குவரத்துப் பெரும் கஷ்டமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டைப் பகுதிகளில் அகதிகளாக இருந்தவர்களும் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [72-139]

## தாக்குதலில் வயோதிபர் பலி

மாதகலில் இருந்து இராணுவத்தினரால் குடியிருப்புப்பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை 5 30 மணி தொடக்கம் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் வடலியடைப்பு, பண்டத்தரிப்பு பகுதிகளை நோக்கி நடத்தப்பட்டன. இத்தாக்குதலின்போது இளவாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வடலியடைப்பில் வசித்துவந்தவருமான ஓய்வுபெற்ற ஆசிரியர் இ. இராசையா (வயது 72) என்பவர் பகல் 11.30 மணியளவில் மாதகல் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் தாக்குண்டு அவர் தங்கியிருந்த வீட்டிலேயே பலியானார்.

இதற்கு முன்னர் ஏவப்பட்ட மற்றொரு ஷெல் சுழிபுரம் பத்திரகாளி அம்மன்கோவிலின் முன் வீட்டு வளவினுள் நேற்றுக்காலை 8.30 மணியளவில் விழுந்து வெடித்தமையால் இரத்தினசபாபதி (52 வயது) என்பவர் பலியானார். இவர் தமது வளவிலுள்ள மலசலகூடத்தினுள் இருந்து சுவரில் இருந்த துவாரத்தினூடாக ஆகாயத்தில் வட்டமிட்ட விமானங்களை பார்த்துக்கொண்டிருந்தபோது அவ்விடத்திலேயே ஷெல்லினால் தாக்குண்டு மரணமானார்.

மேலும் அவ்வீட்டிற்கு அயலிலுள்ள வீடொன்றின்மீது விழுந்த மற்றொரு ஷெல்லினால் திருமதி சிவசுப்பிரமணியம் [வயது 38, அவரது பிள்ளைகளான நிசாந்தி [வயது 4], உமாரஜனி [வயது 12], கிரிசாந்தி [வயது 3] ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (16-139 இ)

## வீதிகளில் சென்றோர் காயம்

சண்டிலிப்பாய், சில்லாலை, திருவடிநிலை, பண்டத்தரிப்பு, சுளிபுரம், அளவெட்டி தெற்கு, தெல்லிப்பளை, மாகியப்பிட்டி ஆகிய இடங்களை நோக்கி மக்கள் வீதிகளில் இடம்

(4-ம் பக்கம் பார்க்க)

## உதவி அரச அதிபர் பொலிஸாரால் கைது

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் உதவி அரசாங்க அதிபர் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர் தற்போது பொலிசாரால் விசாரணை செய்யப்பட்டுவருகிறார் (இ-ரி)

## ஊரடங்கு உத்தரவு

(கொழும்பு)
யாழ். குடாநாட்டில் நேற்றுக்காலை ஆறு மணி முதல் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களைத் தவிர ஏனைய இடங்களிலேயே இவ் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (வீ-இ)

## பரீட்சை பிற்போடப் பட்டது

(யாழ்ப்பாணம்)
இம்மாதம் நடைபெறவிருந்த அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறும் என்று யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார். (சு)

## தாக்குதலில் தளர்வு எதுவும் ஏற்படவில்லை

(கொழும்பு)
இராணுவ நடவடிக்கைகளில் தளர்வு எதுவும் ஏற்படவில்லை என்று கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத்முனசிங்கா தெரிவித்துள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது என்றும் அவர் மேலும் கூறினார். (இ-ரி)

## ஓமந்தைப் பகுதியில் பயணிகள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)
நேற்று முன்தினம் வவுனியா தாண்டிக்குளம் ஓமந்தைப் பகுதியின் இடைப்பட்ட தடைப்பகுதிகளில் குழுமி நின்ற யாழ்-கொழும்புப் பயணிகளை நோக்கி இராணுவத்தினர் சரமாரியான துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதில் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலை

(4ம் பக்கம் பார்க்க)

குளமில்லா ஊருக்கு பசுமை இல்லை
நீரில்லா ஊருக்கு நிறைவு இல்லை

## வரி விளம்பரம்


### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தரி நோவு எண்ணெ கிடைக்குமிடம். எஸ் ரீ மெடிக்கல்ஸ், 490 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (சி-6669)

### அக்கு பங்சர் சிகிச்சை

அக்கு பங்சர் சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற டாக்டரினல், மூட்டுவாதம், ஆஸ்த்மா, ஒற்றைத்தலையிடி. நார்ப்பிடிப்பு, டாலியல் பிரச்னைகள் மற்றும் நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மல்றி பெடிக்கல்சென்ரர், இல121/1, 1/1, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணப் (சி-6819)

### அனுமதி மாதிரிப்பரீட்சை (ஆண்டு-6)

ஆண்டு 5-ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (தமிழ் ஆங்கிலம், கணிதம்) 20 0.-92 (ஞாயிறு நாளை) மு. ப. 8-00, மு. ப 11-00 நடைபெறும். எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காதமாணவர்கள் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6820]


# “உணவு நிவாரணத்தை நிறுத்தியது வெறுக்கத்தக்க செயலாகும்”

## அனுகூலன் அடிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

“நீண்ட காலமாக நமது நாடு யுத்த பூமியாக மாறி விட்டது. பல அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். மக்கள் அன்றாட வாழ்வில் பல தொல்லைகளை அனுபவித்துவருகின்றனர். இந்த நிலையில் அரசு உணவு நிவாரணத்தை நிறுத்தியது வெறுக்கத்தக்க செயலாகும்”

இவ்வாறு கிளிநொச்சிக் கச்சேரி முன்பாக இடம்பெற்ற மறியல் போராட்ட இறுதியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கிளிநொச்சி வெகுஜனப் போராட்டக் குழுச் செயலாளர் வண பிதா அனுகூலன் அடிகளார் குறிப்பிட்டார்.

திரு. மா சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வண. பிதா அனுகூலன் அடிகளார் மேலும் பேசுகையில், “உணவு நிவாரணத்தை வெட்டியதன் மூலம் அரசு தனது இனவாத நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி உள்ளதையே காட்டுகிறது. எனவே தமிழ்மக்கள் இதற்கு எதிராகப் பாரிய அளவில் வெகுஜனப் போராட்டங்களை நடத்தவேண்டும்” என்றார். (83)

# இராசி பலன்

**19-09-1992**
**சனிக்கிழமை**
**(தமிழுக்கு புரட்டாதி 03)**

ஸப்தமி மு. ப 10-13வரை. மிருகசீரிடம் பி இ. 4-13 வரை. இராகுகாலம் காலை 9-02 முதல் 10-32 வரை. சுப நேரம் மாலை 3-02 முதல் 4-32 வரை.

மேடம்- அதிகாரிகள் சினம், மனதுக்கு தாபம், தலைவலி.

இடபம்- சுபச்செய்தி, நற்காரியம் செய்தல், மனக்களிப்பு.

மிதுனம்- முயற்சி தோல்வி, கடன் பயம், அகால போஜனம்.

கடகம்- தூரத்துச் செய்தி, புதிய முயற்சி, பணவரவு

சிங்கம்- காரிய சாதனை, உற்சாகம், பயணம்.

கன்னி- வீண் சிரமம், அதிக பிரசங்கம், அலைச்சல்.

துலாம்- தீயவர் நட்பு, தொழில் விவகாரம், வேதனை.

விருச்சிகம்- கடினமான பேச்சு, காரியசித்தி, பாராட்டு

தனுசு- நல்லோர்சேர்க்கை, லாபசெயல், விருந்துபசாரம்.

மகரம்- ஏமாற்றம், மயக்கம், தடுமாற்றம்.

கும்பம்- நண்பர் விரோதம், குடும்ப துன்பம், வெறுப்பு.

மீனம்- தொழில் லாபம் அறிஞர் சந்திப்பு, சுபகாரியம்.

- ஜோஸ்யர்

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது 19 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம் வருமாறு:

17 வயது ‘பி’ பிரிவில் மானிப்பாய் இந்து எதிர் உரும்பராய் இந்து 19 வயது ‘பி’ பிரிவு இணுவில் சைவப்பிரகாசா எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம். இவ்விரு போட்டிகளும் உரும்பராய் இந்து மைதானத்தில் நடைபெறும்.

17 வயது ‘ஏ’ பிரிவு அத்தியார் இந்து எதிர் சுன்னாகம் ஸ்கந்தா. 17 வயது ‘பி’ பிரிவு மானி. மெமோறியல் எதிர் உரும்பராய் இந்து. இவ்விரு போட்டிகளும் சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெறும். (சி)

# மாணவர் அமைப்பு நடத்தும் திலீபன்நினைவு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு தியாகி திலீபனின் 5ம் ஆண்டு நினைவு நாட்களில் சிரமதானம், நினைவுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் நடாத்தி வருகின்றது.

யாழ். குடாநாடு முழுவதும் சுழற்சி முறையில் செய்யப்படும் சிரமதானம் நாளை சங்கானை முருகமூர்த்தி கோவிலில் இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாமிலும 20ம் திகதி யாழ். போதனாவைத்தியசாலையிலும், 21ம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும், மந்திகை வைத்தியசாலையிலும், 25ம் திகதி தென்மராட்சி பண்டிதர் குடியிருப்புகளிலும் காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நினைவுக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் இம்மாதம் 22ம் திகதி சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் மாலை 2 30 மணிக்கும், 21ம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில காலை 10 மணிக்கும், 24ம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், வைத்தீஸ்வராக் கல்லூரி, அல்வாய் சின்னத்தம்பி வைத்தியசாலையில் பிற்பகல் 3 மணி 25ம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (சு)

# பிரதேச சபைகளுக்கு செயலாளர்கள் நியமனம்

(பருத்தித்துறை)

வடக்கு-கிழக்கு மாகாண சபை உள்ளூராட்சித் திணைக்களம் பிரதேசசபைகளுக்கு முதன்முதலாக செயலாளர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி பிரதேசசபைகளுக்கு செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சேவை உத்தியோகத்தர்கள் தமது புதிய செயலாளர் பதவிகளை ஏற்றுச்செயற்படத் தொடங்கியுள்ளனர்.

இதுவரை பிரதேசசபைகளின் விசேட ஆணையாளர்களான பிரதேசச் செயலர்களே பிரதேசசபைகளின் விசேட ஆணையாளர்களாகவும் செயலாளர்களாகவும் பணியாற்றிவந்தனர் தற்போது செயலாளர்கள் நியமிக்கப்பட்டதும்விசேட ஆணையாளர்கள் தம்மிடமிருந்த செயலாளர்களுக்கான கடமைகளை புதிய செயலாளர்களிடம் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (52-ம)


# தியாகி திலீபன்

திலீபனின் உயிர்த் தியாகம்
எமது விடிவுக்கான வழிகாட்டி
விடிவை நோக்கி முன்னேறுவோம்.

**வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம்**

தலைமைச் செயலகம்,
237, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6818)


# கிராமசேவையாளர்கள் சீருடை அணிய பணிப்பு

(மானிப்பாய்)

சகல கிராம சேவையாளர்களும் இனிமேல் சீருடை அணிந்தே பணிபுரியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான சீருடைத்துணிகள் சகல மாவட்ட செயலகங்களுக்கும் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி யாழ். மாவட்டத்தில பணிபுரியும் கிராம சேவையாளர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் சீருடைத்துணிகள் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வெளிர் மஞ்சள் நிறத்தை யுடைய இததுணிகளால் சேட்டும் நீளக்களிசானும் தைத்து அணியுமாறு கேட்கப்பட்டுள்ளது. (71)


# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
13-03-1957

★

மறைவு:
19-09-1986

## அமரர் நடேசு ஜேசுதாஸ் (நவம்)

(சந்தா தோட்டம், புலோலி கிழக்கு, புலோலி)

ஆண்டேழு சென்றாலும் ஆறாது உன் நினைவு
மாண்டாயோ, மனைவி மக்கள் கதறியழ,
நாளெல்லாம் உன் நினைப்பு, நாவெல்லாம்
உன்பேச்சு!
தாழ்வெல்லாம், நண்பர், சுற்றம் கலங்கி
அழுகின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உன் பிரிவால் வாடும்;

மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார்,
மைத்துனிமார், மாமா, மாமி, மருமக்கள்,
பெருமக்கள், அன்புச் சகலன்.

கே. இ. கிருபாகரசூரியன்
(ஈழநாடு நிருபர், நெல்லியடி)
‘சந்தா கோட்டம்’,
புலோலி கிழக்கு,
புலோலி.

(எ-2437)


# 1020தமிழகதிகள் திரும்பினர்

(சென்னை)

தமிழகத்திலிருந்து நேற்று முன்தினம் 1020 இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பியனுப்பப்பட்டனர்.

இதுவரையும் 26,333 தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ரி)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

நாட்டிய கலைமணிச்

## சான்றிதழ் இரத்து செய்தல்

செல்வி
பிரியதர்சினி
அமிர்தலிங்கம்

மேற்கூறியவருக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 1989 டிசம்பரில் வழங்கிய நாட்டியக் கலைமணிச் சான்றிதழ் உடனடியாக இரத்துச் செய்யப்படுகிறதென்பதை அரசு நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறோம்.

இச்சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் இவருக்கு ஏதும் நியமனம் வழங்கப்பட்டால், அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொறுப்பாகமாட்டாது.

பதிவாளர்

(ஏ-2451)


# பொலிஸ் திணைக்களம் கொம்பியூட்டர் மயம்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் இவ்வருட இறுதிக்குள் கொம்பியூட்டர் மயப்படுத்தப்படவிருக்கிறது.

இதற்காக 3 கோடியே 40 லட்சம் ரூபா பெறுமதியான கொம்பியூட்டர் சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகத்தின் புதிய கட்டடத்தில் இந்தக் கொம்பியூட்டர் சாதனம் பொருத்தப்படும்.

நாடெங்கும் உள்ள சகல குற்றவாளிகளினதும் விபரங்கள் சேகரிக்கப்பட்டு, பதிவு செய்து இங்கு வைக்கப்படும். அத்துடன் பொலிஸ் திணைக்களத்திலுள்ள சகல உத்தியோகத்தர்களின் விபரங்களும், சம்பளப் பட்டியல் தயாரித்தல் ஆகியவையும் கொம்பியூட்டர் மூலமே நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (ரி)

# யாழ். மாநகரசபை ஊழியர் கடத்தப்பட்டு விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஊழியர் ஒருவர் கொழும்பில வைத்துக் கடத்தப்பட்டார். இம்மாதம் 3ம் திகதி தமது சொந்த அலுவல்கள் காரணமாகப் பெற்றோருடன் கொழும்பு சென்ற பின், அங்கு பிரதான புகையிரத நிலையத்திலிருந்து ஆட்டோ ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது திடீரென வாகனத்தில் வந்த ஆயுதபாணிகள் மூவரால் கடத்தப்பட்டார்.

குறிப்பிட்ட மர்ம வாகனத்தில் பல பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்ட இவரிடம், தான் ஒரு பொலிஸ் எஸ். பி. என்று ஆயுதபாணிகளில் ஒருவர் கூறி, மேற்படி நபரிடமிருந்து 25 000 ரூபாவையும், உடுபுடவையுடன கூடிய பிரயாணப் பையையும் பறித்த பின்னர், இனந்தெரியாத இடத்தில் வாகனத்திலிருந்து இறக்கிவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டனர் (158)

முகாம்களில் தங்கியுள்ள

# கர்ப்பிணிகள், குழந்தைகள்

# போஷாக்கின்றி பாதிப்பு

(உடுவில்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மார்களும், குழந்தைகளும் போதிய போஷாக்கின்மையால் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

சத்துணவுக் குறைவு காரணமாகப் பாதிப்படைந்த குழந்தைகளையும், கர்ப்பிணித் தாய்மார்களையும் பாதுகாக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டு வருகின்றது.

அகதிமுகாம்களில் சுகாதார மையங்கள் அமைக்கப்பட்டு, பாதிப்படைந்தவர்களுக்கு போஷாக்குணவுகள் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம், தென்மராட்சி போன்ற இடங்களில் சுகாதார முகாம்கள் அமைக்கப்பட்டு போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பாதுகாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1845 குழந்தைகள் இவ்வாறு பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (109)

வர்த்தக ஊழியருக்கு

## அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் ஐயனார் கோவில் முன்றலில் இன்று நடைபெறும் தியாகி திலீபனின் ஐந்தாவது சிரார்த்த தின உண்ணாவிரதத்தில் அனைத்து வர்த்தக ஊழியர்களும் கலந்து கொள்ளுமாறு வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## 'ஆதாரம்' வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் சமூக பொருளாதார விஞ்ஞான ஆய்வு இதழான 'ஆதாரம்' 8-ஆவது இதழ் வழமையை விட கூடுதலான பக்கங்களில் உணவு பதனிடல் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

உணவு பதனிடல் தொடர்பான சிறப்புக் கட்டுரைகள் பேட்டிகள் மற்றும் துணுக்குகள் வாசகர்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி ஆகியவற்றை உள்ளடக்கி இவ் இதழ் வெளிவந்துள்ளது.

## தமிழ்மொழித்திறன் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இருபாலை தமிழ் மாமன்றம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் தமிழ் மொழித்திறன் பரீட்சை நடத்தவுள்ளது.

மாணவர்களுக்கிடையில் தமிழ் மொழி அறிவை வளர்க்கும் நோக்குடன் நடத்தப்படும் இப் பரீட்சையில் யாழ் மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

# ஆய்வு மைய விபத்தில் இரு விஞ்ஞானிகள் பலி

(புதுடில்லி)

இந்தியாவில் பூனா நகரில் உள்ள இந்தியப் பாதுகாப்புத் துறையின் ஆய்வு மையத்தில் ஏற்பட்ட விபத்தில் இரண்டு இந்திய விஞ்ஞானிகள் பலியானார்கள்.

இந்த ஆய்வு மையத்திலேயே இந்தியாவின் ஏவுகணைகள், ராக்கெட்டுகள் மற்றும் போர் தாங்கிகள் வடிவமைக்கப்படுகின்றன.

இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்பதை வெளியிட ஆய்வு நிறுவனம் மறுத்துவிட்டது. (ந)

# தமிழ்நாட்டில் வீடுகளிலும் கடைகளிலும் பிரபா படம்

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள பல கிராமங்களில் வர்த்தகநிலையங்கள் மற்றும் வீடுகளில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் உருவப்படம் காணப்படுகிறது.

தமிழ்நாட்டு நகர்ப் பகுதிகளில் முன்னர் பிரபாகரன் படம் இருந்த இடங்களில் இந்தியாவின் தடை உத்தரவிற்குப் பின்னர் புலிமுகப் படங்கள் காட்சியளிக்கின்றன.

சில வீடுகளிலும் 'புலிமுகப் படங்கள் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இது விடுதலைப்புலிகளுக்கு தமிழக மக்களின் ஆதரவு அதிகரித்துள்ளதைக் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## ஒய்வூதிய பணிக்கொடை

(மானிப்பாய்)

ஒய்வூதியத் திணைக்களத்திலிருந்து 47 பேரின் ஒய்வூதியப் பணிக்கொடைகள் யாழ் செயலக ஒய்வூதியப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 14 விதவைகள் ஒய்வூதியம் பெறுபவர்களினதும் 33 இவில் ஒய்வூதியம் பெறுபவர்களினதும் அடங்குகின்றன. (71)

## உணவு முத்திரை

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மே, யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் யாழ். சமூகசேவைப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளன. (71)

# விதை உருளைக்கிழங்கு யாழ்ப்பாணம் வருகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு தேவையான விதை உருளைக்கிழங்கை அனுப்பிவைக்க தயாராக உள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சர் ஆர். எம். தர்மதாச பண்டா தெரிவித்துள்ளார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண அரசஅதிபர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 200 தொன் விதை உருளைக் கிழங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தேவைப்பட்டால் அனுப்பிவைக்கப்படும்எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சே)

பத்மநாபா கொலை வழக்கு

# 18 குற்றவாளிகள் மீது நீதிமன்றில் ரகசிய விசாரணை

## அறுவர் பிணையில் விடுதலை

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள முன்னாள் தி. மு. க. அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் உட்பட பதினெட்டு எதிரிகளும் சென்னை விசேட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு இரகசியமாக விசாரணை நடத்தப்பட்டு அடுத்த விசாரணை எதிர்வரும் 23ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சுப்புலட்சுமியின் கணவர் ஜெகதீசன், முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராசன், வை. ரவிச்சந்திரன், வழக்கறிஞர்கள் மருதநாயகம், வீரசேகரம் ஆகியோரும் எதிரிகளில் அடங்குவர், இந்த அறுபேரும் பிணையில் விடப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணையின்போது வழக்கறிஞர்கள் தவிர வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை. பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது

இரகசிய விசாரணையின் போது குற்றப்பத்திரிகை நகலின் ஒரு பகுதி எதிரிகளிடம் வழங்கப்பட்டது. (ரி)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுத் தராதரப்பத்திர முகாமைத்துவ பயிற்சி நெறிக்கு பயிற்சியாளர்களைத் தெரிவதற்கான நேர்முகப் பரீட்சை நாளை 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

# திலீபன் நினைவுதினம் வடமராட்சி பகுதியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(பருத்தித்துறை)

லெப். கேர்ணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் வடமராட்சிப் பகுதியில் உணர்ச்சி பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

இப்பகுதியின் மூலைமுடுக்குகள் எல்லாம் திலீபன் ஞாபகார்த்தப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, திலீபனின் திருவுருவப் படங்கள வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்ச்சிகள், அஞ்சலி உரைகள் என்பன இடம்பெற்று வருகின்றன. வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் தோரணங்கள் கட்டப்பட்டும், சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விடப்பட்டும் உள்ளன. வீதிகளில் திலீபனின் தியாக நினைவுகள் பற்றிய பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், சனசமூகநிலையங்கள், பொதுச்சேவை நிறுவனங்கள் போன்றவற்றிலும் விசேட அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு, மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மலராஞ்சலிகள் இடம்பெற்று வருகின்றன

தியாக தீபம் திலீபனின் ஞாபகார்த்தமாக அடையாள உண்ணாவிரதம், கருத்தரங்கு, சொற்பொழிவுகள் இடம் பெற்று வருகின்றன. சிரமதான வேலைகளும் நடைபெற்று வருகின்றன. (52)

## காரியாலயம் இடமாற்றம்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பிரதான காரியாலயமும் சுன்னாகம்உப அலுவலகமும் தற்போது சுன்னாகம் பொதுசன நூலகக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. சுன்னாகம் சந்தியிலுள்ள மேல மாடிக்கட்டடத்தில் இயங்கி வந்த இக்காரியாலயங்கள் பாதுகாப்புகருதி இங்கு மாற்றப்பட்டுள்ளதாக பிரதேசசபை பொறுப்பதிகாரி தெரிவித்தார். (109-154)

# நான்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் அன்பளிப்பு

(நல்லூர்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் நான்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் அண்மையில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளது மண்ணெண்ணெயில் இயங்கும் இவ்வியந்திரங்கள் யுனிசெப் உதவியுடன் பொம்மைவெளி, அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, யமுனாரி போன்ற இடங்களில் அமைந்துள்ள சிறிய நீர் விநியோகத் திட்டங்களை மீளஇயங்க வைப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

மின்சாரத் தடையின் பின் இந்த நீர்விநியோகம் ஆரம்பிக்க இருப்பதால் விநியோகத்தின்போது ஏற்படும் இடையூறுகளை முன்கூட்டியே தவிர்ப்பதற்காக உடைந்த, பழுதடைந்த பகுதிகளைத் திருத்தி புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

நாயன்மார்கட்டு, கொழும்புத்துறை ஆகிய இடங்களில் தடைப்பட்டுள்ள நீர்விநியோகத் திட்டத்தை மீண்டும் செயற்பட வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (158)

# திலீபனே நினது புகழ் நிலைக்கும் என்றும்

செந்தமிழை நேசித்தாய்! தமிழீழத்தை  
தெய்வமென வழிபட்டாய்! இன்றோ மக்கள்  
நொந்தழவே பிரிந்திட்டாய் திலீபா! நின்தன்  
தியாகத்தை வீரத்தை போற்றுகின்றோம்.

கொள்கையினில் குன்றானாய்! தமிழ் ஈழத்தின் !  
வெற்றிக்கே இன்னுயிரை கொடுத்தும் விட்டாய்  
உள்ளத்தால் மிக உயர்ந்தாய் நெஞ்சிற்கொண்ட  
உறுதியினை வியக்கின்றோம் போற்றுகின்றோம்.

வீரத்தால் விவேகத்தால் உயர்ந்தாய்! இன்றோ  
மேவுமுண்ணா விரதத்தால் உயிரை நீத்தாய்  
பாரெல்லாம் புகழ்கின்ற நிலையை உற்றாய்  
பைந்தமிழில் பற்றுடையோய் மறவோம் நின்னை.

அமிழ்தனைய இன்குணத்தோய்! தியாகம் வீரம்  
ஆற்றல்கள் பலவுடையாய்! சிறப்பின் மிக்க  
தமிழ் உள்ள வரையிலும் நின்பேர் இருக்கும் !  
தக்கோர் தம் உளத்தெல்லாம் இருக்கின்றாயே?

— தமிழ்மகன்.

மூன்று மாதங்கள்

## சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கடற்றொழில் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த மூன்று மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு சம்பளம் வழங்கப்படாதது குறித்து யாழ் அரச அதிபருக்கு இவ் ஊழியர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

[illegible]மக்குரிய சம்பளத்தை [illegible]ன் பெற்றுத்தருமாறு [illegible] அதிபருக்கு இவ்ஊழியர்க[illegible] விண்ணப்பித்துள்ளனர்.

# குழாய் கிணறுகள் மூலம் நீர் விநியோகிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் நீர் விநியோகப் பகுதி, 21 குழாய்க் கிணறுகளை அமைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளது.

முதற் கட்டமாக முத்திரைச்சந்தி, நாவாந்துறை, பாசையூர், அரியாலை போன்ற இடங்களில் குழாய்க் கிணறுகளையும் அதனுடன் இணைந்த கைப்பம்புகளையும் அமைத்துள்ளனர்.

ஈச்சமோட்டை, பாசையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை போன்ற இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளது மற்றும் கொட்டடி, அரியாலை, கொய்யாத்தோட்டம் போன்ற இடங்களிலும் இவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள எடுக்கப்படவிருக்கின்றது.

மாகாணசபை மூலவள நன்கொடையின் உதவியுடன் 10 குழாய்க் கிணறுகளும், யூனிசெப் உதவியுடன் 10 குழாய்க்கிணறுகளும், மாநகர சபை நிதியிலிருந்து ஒரு குழாய்க் கிணறும அமைக்கப்படவிருப்பதாக யாழ் மாநகர நீர் விநியோகப் பகுதிப் பொறியியலாளர் பொ. தவராஜா தெரிவித்துள்ளார். (158)

வீதிகளில் (1ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்து கொண்டிருந்த வேளையில் இவர்களை நோக்கி படையினரால் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

துப்பாக்கிச்சூட்டினால் 10 பேர் வரையில் படுகாயமுற்றனர். இவர்களுள் திருமதி நாகேஸ்வரி அருளையா 42 வயது) அளவெட்டி மேற்கு, கே. தில்லைநாதன் (32-வயது) மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் மாலினி வேலாயுதம் (12 வயது) மடத்தடி சண்டிலிப்பாய், தவராசா விமல்ராஜ் (12-வயது) மண்டுமண்டாள், சண்டிலிப்பாய் ஆகியோர் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

# மக்கள் நிலைகுலைந்து வெளியேற்றம்

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு பகுதிகளிலும் அதனோடு அண்டிய சுற்றுப்புறங்களிலுமுள்ள கிராமங்களிலிருந்தும் படையினரின் கடல், தரை, ஆகாய முப்படை தாக்குதல்களினாலும் சிர்குலைந்த மக்கள் நிலைகுலைந்து கைகளில் தாங்கிய ஒரு சில பொருட்களுடன் வீதி வழியே ஓட்டமும் நடையுமாக கால்போனபோக்கில் செல்வதை காணக்கூடியதாகவிருந்தது.

இன்னும் சிலர் மாட்டுவண்டிகளிலும், உழவுயந்திரங்களிலும், சைக்கிள்களிலும் தமது பொருட்களை இன்னோர் இடத்தைநோக்கி ஏற்றிச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது.

சிலர் தமது உறவினர் சிலரை தவறவிட்ட நிலையில் செய்வதறியாது வீதிகளில் செல்லும் உறவினர்களையும் ஏனையோரையும் விசாரிப்பதனையும் அழுது புலம்புவதனையும் காணக்கூடியதாக இருந்தது. (162)

# ஆலயம், பாடசாலைகளில் மக்கள் தஞ்சம்

இராணுவத்தினர் பத்துக்கு மேற்பட்ட ஷெல்களை குடியிருப்பு பகுதிகளை நோக்கி மேற்கொண்டனர். இதனால் சுழிபுரம், மூளாய், பொன்னாலை, பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சி, பிலைசுட்டி, பனிப்புலம், பண்ணாகம், பருளாய் ஆகிய பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தனர். (137)

# ஹெலி, பீரங்கித் தாக்குதல்

நேற்று அதிகாலையில் இருந்து ஹெலி ஒன்று வலிகாமம் மேற்குப் பகுதிகள் முழுவதையும் பல தடவைகள் வானில் வட்டமிட்டு சரமாரியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டது

இதே நேரத்தில் திருவடிநிலை கடற்பிராந்தியத்தில் உள்ள பீரங்கிப்படகில் இருந்தும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பீரங்கித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. இதனால் வலிகாமம் மேற்குப் பகுதி முழுவதும் மக்கள் பெரும் பீதியுடனும் பதற்றத்துடனும் காணப்பட்டனர். (137)

ஹெலிகொப்டரிலிருந்து வலிகாமம் மேற்குப் பகுதியில் பலத்த துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. சித்தன்கேணி, சங்கானை, பண்டத்தரிப்பு, பெரியவிளான், அளவெட்டி, மாகியப்பிட்டி ஆகிய இடங்களில் அடிக்கடி வானில் பறந்து தீவிர துப்பாக்கிப் பிரயோகத்தில் ஹெலி ஈடுபட்டது. சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு சமீபமாக ஹெலிகொப்டரில் இருந்து கிரனைட் வீசப்பட்டதால் பெண் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது

இதேவேளை மாதகல் பகுதியிலிருந்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஷெல்கள் வடலியடைப்பில் வந்து வீழ்ந்ததினால் அப்பகுதியிலுள்ள பல வீடுகள் சேதமடைந்தன.

சங்கானை மேற்கு பல்லசுட்டி என்ற இடத்தில் வீழ்ந்த ஷெல்லினால் இருவர் பலத்த காயமடைந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (72-71)

# பாடசாலைகள் இயங்கவில்லை

நேற்றுக் காலை 5-30 மணி முதல் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களால் சுழிபுரம், பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகள் இயங்கவில்லை.

ஆரம்பத்தில் ஆசிரியர்கள் தமது பாடசாலைகளுக்குச் சென்றபோதும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்கவில்லை. (இ-139)

# யாழ்.நகர் நேற்று அதிர்ந்தது

மண்டைதீவு படைமுகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்றுக்காலை 5-50 மணி தொடக்கம் 6-40 மணிவரையில் யாழ். நகர் அதிரும் வகையில் குருநகர்க் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்களையும் 50 கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

# ஆலயம், குருமடம், வீடுகள் சேதம்

பங்குக்குரவர் ஆலய குருமடம், புனித யாகப்பர் ஆலயம் உட்பட 10க்குமேற்பட்ட வீடுகளும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

# பொதுமக்கள் 10 பேர் படுகாயம்

குருநகர் செபஸ்தியான் வீதியில் உள்ள இரண்டு வீட்டில் வீழ்ந்த ஷெல்லினால் தாயும் இரு பிள்ளைகளும், இதே இடத்தில் அருகிலுள்ள வீட்டில் வீழ்ந்த ஷெல்லினால் கணவன், மனைவியும் பாங்ஷால் வீதியில் வீழ்ந்த ஷெல்லினால் ஒருயுவதியும் அடப்பன் வீதியில் ஒருவீட்டில் வீழ்ந்த ஷெல்லினால் ஒருவரும் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

இவர்களில் சிவசுப்பிரமணியம் மதி (33-வயது) அடப்பன்வீதி, திருமதி யூஜியா வலந்தன் (32 வயது) செபஸ்தியான் வீதி இவரது பிள்ளைகளான ரொனிஜோய் வலந்தன் [5வயது], செல்வி கயல்விழி வலந்தன் [3-வயது] ஆகியோர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செல்வி பிரியா கிறிஸ்ரியா (16-வயது) மவுண்கார்மேல் வீதி, ஜோன் கிறிஸ்துராசா (41-வயது செபஸ்தியான் வீதி குருநகர், திருமதி காணிக் கைமரியாள் கிறிஸ்துராசா (34-வயது) செபஸ்தியார் வீதி ஆகியோரும் காயப்பட்டுள்ளனர்.

# குருநகர்ப்பகுதி மக்கள் இடம்பெயர்வு

நேற்றுக்காலை 6-05 மணியிலிருந்து 6-35 மணிவரை மண்டைதீவு ராணுவ முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதலும் 50 கலிபர் தாக்குதலும் குருநகர் குடிமனைகளை நோக்கி மேற்கொளளப்பட்டது.

யாழ்-குருநகர் புனித-யாகப்பர் குருமனை-யாழ் கோவில் வீதி அருள் ஆச்சிரமம் யாழ்-அடப்பன் வீதி வீடுகள் ஆகியன இதனால் சேதமடைந்தன. இதனையடுத்து கரையோரப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் தஞ்சமடைந்துள்ளனர். (59-56)

# யாழ். செயலகத்தை கலிபர் தாக்கியது

படையினர் நேற்று மேற்கொண்ட தாக்குதலினால் யாழ். செயலக கட்டிடத்தின் தூண் ஒன்று சேதத்திற்குள்ளானது.

நேற்றுக் காலை மண்டைதீவுப் பகுதியிலிருந்து படையினர் மேற்கொண்ட கலிபர் மற்றும் ஷெல் தாக்குதலின்போது செயலகப் பகுதியை நோக்கி சத்தத்துடன் வந்த குண்டொன்று செயலகத்தில் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க நிலையம் அமைந்துள்ள கட்டிடத்தின் முன்பக்க தூண்மீது விழுந்ததினால் அதுசிறு சேதத்திற்குள்ளானது. (71)

# இரத்ததானம் செய்ய வேண்டுகோள்

போர்க்கால சூழ்நிலையினாலும் ராணுவ நடவடிக்கைகளினாலும் பாதிக்கப்பட்டு வரும் மக்களின் உயிரைக் காப்பாற்ற இரத்ததானம் செய்யுமாறு யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இரத்தவங்கியில் தற்போது இரத்தம் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதனால் இரத்ததானம் செய்வோர் உடனடியாக தங்களுடனோ அல்லது இரத்த வங்கியிடமோ தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (56)

# இரு படையினர் பலி - ஐவர் காயம்

(கொழும்பு)

வலிகாமம் மேற்குப் பகுதியில் ஸ்ரீலங்காப்படையினர் நேற்றுக்காலை ஆரம்பித்த தாக்குதல் சுமார் 9 மணி நேரம் நீடித்ததாகவும் இத்தாக்குதலின்போது 2 படையினர் பலியானதாகவும் 5பேர் காயமடைந்ததாகவும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டபின் ஆரம்பித்த இத்தாக்குதல் கடுமையாக இருந்ததாகவும் இத்தாக்குதல் பூர்த்தியடைந்துவிட்டதாகவும் அடுத்த சில தினங்களில் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படலாமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க)

# அடுத்தவருடம் முதல் முழுமையான நிவாரணம்

(கொழும்பு)

இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் அடுத்த வருடத்திலிருந்து முழுமையாக வழங்கப்படும் என்று புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ராஜா அமரசேகரா தெரிவித்தார்.

வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அகதிகளுக்கான நிவாரண உதவி அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளது பற்றி கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: அகதிகளுக்கான நிவாரணம் அடுத்த வருடம் ஜனவரியிலிருந்து முழுமையாக வழங்கப்படும். இந்த நான்கு மாதகாலத்திலும் அகதிகளுக்கு உதவுவதற்கு அமைச்சு, அரசசார்பற்ற நிறுவனங்களினதும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளினதும் உதவிகளை கோரியுள்ளது என்றும் தெரிவித்தார். (ரி)

## வன்னிப்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முருங்கன், புதுக்குடியிருப்புப் பகுதி கிளிநொச்சி மாவட்டங்களிலும் தியாகி திலீபனின் திருவுருவப்படங்கள் அரச தனியார் நிறுவனங்களிலும் பாடசாலைகள், சனசமூக நிலையங்களிலும் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தல்கள் மேடைகளில் வைக்கப்பட்டு மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டி ஆகியனவும் இடம்பெற்றுவருகிறது

மணலாறு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்புப் பகுதிகளில் தங்கியிருக்கும் மக்களும் தியாகி திலீபனின் திருவுருவப்படங்கள் பெரிய அளவில் வைத்து அஞ்சலி செலுத்திவருகிறார்கள். (இ-56)

## ஓமந்தைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும், ஒருவர் நேற்றுக் காலை யாழ் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பு நோக்கி செல்வதற்காக நின்றவர்களான கைதடி மேற்கைச் சேர்ந்த செல்லையா சிவசுப்பிரமணியம் (33 வயது) என்பவரே பலத்த காயத்திற்குள்ளான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு செல்வதற்காக மக்களை வவுனியாப் பகுதிக்குள் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை.

திருமதி சிவசுப்பிரமணியம் என்பவர் இச்சம்பவம் பற்றி தெரிவிக்கையில், இரு பகுதிகளுக்குமிடையில் தாக்குதல சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் படையினர் பொதுமக்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்ததாகவும் அங்கு நின்ற மக்கள் தமது பொருட்களை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு பாதுகாப்புத் தேடி ஓடியதாகவும் கூறினார்,

அரை மணி நேரமாக படையினர் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்ததாகவும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் கூறினார். (இ56

# திருமலையில் ஒருவர் பலி

[திருமலை]

திருமலையில் வாகனம் ஒன்று வெடித்துச் சிதறியதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவம் குறித்து மேலதிக தகவல்கள் இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை [க]

# பிற்போடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

இன்று 19-ம் திகதி நடைபெறவிருந்த கந்தரோடை கலைமதி சனமூக நிலைய அறவழிப்பாலர் பாடசாலையும்சிறுவா குழுவும் இணைந்த மெய்வல்லுநர் இல்லப்போட்டியும் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது

## தமிழகத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ராமச்சந்திரன், தமிழ்தேசியக்கட்சித்தலைவர் ப. நெடுமாறன் உட்பட ஏழுபேர் கைது செய்யப்பட்டதை அடுத்தே வன்முறைகள் வெடித்தாகவும் கூறப்படுகிறது.

வன்முறைச் சம்பவங்களையடுத்து தமிழகத்தின் பல பகுதிகளிலும் சுமார் 3,000 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இத்தவேளையில் டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன் உட்பட நான்கு பேர் சொந்த ஜாமினில் நேற்று மாலையே விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-சேக)

## மாணவர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையும் குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும், 20ம் திகதி உடுத்துறை மகாவித்தியாலயம், 21ம் திகதி மருதங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 22 ஆம் திகதி வெற்றிலைக்கேணி நடேஸ்வரா கல்லூரி 23 ஆம் திகதி ஆழியவளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் 24ஆம் திகதி தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும், 25ஆம் திகதி கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன பாடசாலையும் முறையே பங்குபற்றவுள்ளன. 150)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number D/10335/